Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389

தேசிய தினசரி

மலர் 14
இதழ் 68

யாழ்ப்பாணம் சித்திரை 6 ரபி;அவ்வல் 8 செவ்வாய்க்கிழமை (18-4-72)

JAFFNA COLLEGE UNDERGRADUATE LIBRARY 3 MAY 1972

குறைந்த செலவில் சிறந்த சேவை



கொழும்பு ஒப்ரிக்கல்
93, ஸ்ரான்லி ரோட் - யாழ்ப்பாணம்
மக்கள் வங்கிக்கு அருகாமையில்-மேல் மாடி)

அளவெட்டி அடைவு கடைக் கொள்ளை

# கைப்பற்றப்பட்ட 'டயறி'யில் கொள்ளை பற்றிய தகவல்கள்!

## 3 சந்தேக நபர்கள் கைது! மீட்ட நகைகள் கச்சேரியில்

யாழ்ப்பாணம், செவ்வாய்

அளவெட்டி அடைவு கடைக் கொள்ளை சம்பந்தமாக இதுவரை மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். மற்றும் நான்கு சந்தேகநபர்களைப் பொலிஸார் தேடிவருகின்றனர். வடபகுதியில் இதுவரை கைப்பற்றப்பட்ட சுமார் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் யாழ்ப்பாணக் கச்சேரியிலுள்ள திறைசேரியில் வைப்பதற்காகப் பொலிஸ் அதிகாரி கந்தையாவினால் நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஏ. ஏ. யோசப்பிடம் ஒப்படைக்கப்பட்டது.

நேற்று மாவிட்டபுரம் தெல்லிப்பளை, அளவெட்டி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் உள்ள சில வீடுகளிலும் கடைகளிலும் 5000 ரூபா ரொக்கம் உட்பட உருக்கப்பட்ட 50 தங்கப் பவுண் தங்கச் சங்கிலி, றேடியோ சீனா கைக்கடிகாரம் சைக்கிள், சேம மற்றும் பல பொருட்கள் பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளதென வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல நகைவியாபாரி ஒருவர் நேற்று உருக்கப்பட்ட 10 தங்கப்பவுணை பொலிசாரிடம் ஒப்படைத்தார். இதுவரை மன்னரில் ஐந்து நகைக்கடை முதலாளிகளும் யாழ். நகரில் 10 நகைக்கடை முதலாளிகளும் உருக்கப்பட்ட பவுணை பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனரென்று பொலிசார் தெரிவித்தனர்.

டயறி

சந்தேகநபர் ஒருவரிடமிருந்த 'டயறி'யில் கொள்ளை பற்றிய விபரங்கள் இருந்ததாகவும் அதன்

[5-ம் பக்கம் பார்க்க]

ஒன்றரைலட்சம் ரூபா பெறுமதியான

## கடத்தல் பொருள்களை இராணுவம் கைப்பற்றியது

வல்வெட்டித்துறை, திங்.

ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா பெறுமதியான கடத்தல் பொருட்களை இராணுவத்தினர் கைப்பற்றினர்.

கடந்த இரவு ரோந்து சென்ற இராணுவத்தினர் பருத்தித்துறைக் கடலில் வைத்து இந்திய சேலைகள் கொண்ட வலைகள், லேசுகள் மாஜெனி உதிரிப்பாகங்கள், சாரம்கள் அடங்கிய 16 பொதிகளையும் யந்திரம் பூட்டிய கட்டுமரம் ஒன்றினையும் கைப்பற்றினர்.

இராணுவத்தினரைக் கண்டதும் கட்டுமரம் ஓட்டியவர்கள் ஓடித்தப்பித்துக் கொண்டார்களாம். எவரும் கைது செய்யப்படாமையால் கைப்பற்றப்பட்ட ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா பெறுமதியான கடத்தல் பொருட்களையும், என்ஜினுடன் கட்டுமரத்தையும் வல்வை சுங்க சேகரிப்பாளரிடம் இராணுவத்தினர் ஒப்படைத்தனர்.

யாழ் மாவட்ட சுங்க உதவி கலெக்டர் இதுபற்றி விசாரணை மேற்கொள்ளும்படி உத்தரவிட்டுள்ளார்.

## கடத்தப்பட்ட சிறுவனின் பரிதாப அனுபவங்கள்!

வல்வெட்டித்துறை, திங்கள்

16 மாதங்களுக்கு முன்னாக கடத்திச்செல்லப்பட்ட 12 வயதுச்சிறுவன் வீடுவந்து சேர்ந்தான்.

பதினாறு மாதங்களின் முன்பு வல்வெட்டித்துறை தியேட்டர் ஒன்றில் படம் பார்த்துவிட்டு இரவு நடுநிசியில் வந்த இருசிறுவர்களை வான் ஒன்றிலிருந்து இறங்கிய இனம் தெரியாத இருவர் வயிற்றிலும் கட்டி வாயிலும் சீலையைத் திணித்து தசத்தமிடாதபடி வானில் போட்டுக்கொண்டு சென்றனராம். பின்னர் இரண்டு மூன்று நாட்களின்பின் தாங்கள் இருவரும் மட்டக்களப்பில் யாரிடமோ விற்கப்பட்டதாகவும் பின்னர் தாங்கள் இருவரும் வயிறுவலியினை யடுத்த திமிலதீவிற்குக் கொண்டுசெல்லப்பட்டு அங்கு காட்டிலுள்ள ஒரு சுத்தரிச் சேனையில் வேலை செய்யும்படி பணிக்கப்பட்டதாகவும், இம்சிக்கப்பட்டதாகவும் சவுக்கினால் அடிக்கப்பட்டதாகவும், கடத்திச் செல்லப்பட்டு மீண்டுவந்த கணேசமூர்த்தி ரஞ்சனதாஸ் (வயது 12) பரிதாபத்துடன் கூறினான்.

அங்கு தமக்கு எஜமானனும், மனைவியும், பிள்ளைகளும் தம்மை இம்சித்ததாகவும் இந்த வேதனைகளைப் பொறுக்கமாட்டாமல் தப்பிக்க முயற்சித்த சமயங்களில் ஒருமுறை வாழைச்சேனையில் வைத்தும் மட்டக்களப்பில் வைத்தும் பிடித்ததாகவும் பின்னர் தக்கசமயம் பார்த்து கடந்தவாரம் வெகு சிரமப்பட்டுத் தப்பித்துவந்ததாகவும் கூறினான் வல்வெட்டித்துறைப் பொலிஸில் புகார்செய்துள்ளனர்.

யாழ். கைக்குண்டு வீச்சு வழக்கு

## 1-ம் எதிரிக்கு 2 வருட நன்னடத்தை; 2-ம் எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணம் கைக்குண்டு வீச்சு வழக்கில் 1ம் எதிரி 1000 ரூபா பொறுப்பில் 2 வருட நன்னடத்தைப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இவ்வழக்கு வடபகுதி அசைஸ்கோர்ட்டில் நீதியரசர் ஜெயபத்திராஜு முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் யாழ்ப்பாணத்தில் 1969ம் ஆண்டு ஆவணி 3ந் திகதி தர்மராசா, சுந்தையா பொன்னுக்கோன் ஆகியோர் கைக்குண்டு ஒன்றைச் சட்டத்திற்கு விரோதமாகப் பாவித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் எஸ். நாகராசா, புறக்டர்களான வி. பேரம்பலம் ஜீ. குமாரசாமி ஜெயராஜதேவன் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார். எதிரிகளுக்காக அரசாங்கத்தரப்பில் வழக்கறிஞர் முத்துக்குமாரசாமி நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் அட்வகேட் குமார் அமரசேகரா ஆஜரானார்.

1ம் எதிரி சொத்துக்குச் சேதம் விளைவித்த குற்றத்தை ஒப்புக்கொண்டார். இதைத் தொடர்ந்து 2ம் எதிரி விடுதலைசெய்யப்பட்டார்.

1ம் எதிரியை 1000ரூபா பொறுப்பில் 2 வருட நன்னடத்தைப் பிணையில் செல்ல அனுமதித்த நீதியரசர் கோர்ட் செலவாக 250 ரூபா கட்டும்படி உத்தரவிட்டார்.

அசைஸ் விசாரணை நாளை காலை வரை ஒத்திப்போடப்பட்டது.

# அப்பல்லோ-16 கலத்தில் சிறு கோளாறு

ஹூஸ்டன் ஏப் 17

அப்பல்லோ-16 வின் வெளிக்கலத்தில் சிறு கோளாறு ஒன்று ஏற்பட்டு அதனை விரர்கள் சாதுரியமாகத் திருத்திக்கொண்டுவிட்டதாக தரைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

பூமியின் சுற்றுப்பாதையிலிருந்து சந்திரப்பாதையில் புறப்பட்ட அப்பல்லோ-16 கலத்தின் கட்டளைக்கலத்தைப் பிரித்து சந்திரக்கலத்துடன் இணைத்துக்கொண்ட பின்வரும் பிரயாணம் வெற்றிகரமாக நடந்துகொண்டிருந்தது. வீரர்கள் திடீரென கசிவு ஏற்பட்டுள்ளதை உணர்ந்தனர். உடனே ஹூஸ்டனிலுள்ள தரைக்கட்டுப்பாட்டு நிலையத்துக்கு அறிவித்தனர். பின்னர் இருவர் நிலாக் கலத்துக்குச் சென்று கோளாறைத் திருத்தினர். அதன் பின் மீண்டும் கட்டளைக் கலத்துக்குத் திரும்பினர்.

இப்பொழுது கலம் மீண்டும் வெற்றிகரமாக சந்திரனைநோக்கி விரைந்து கொண்டிருக்கின்றது.

REGAL (Jafina)
Daily 5-15, 7-15 p.m.
Sat. Sundays 10-30
Dirke Hayes
in
LOST IN THE DESERT

தினசரி 2-00 இரவு 9-45
சிவாஜி-விஜயகுமாரி
நடித்த
குங்குமம்

யாழ் தியேட்டர்
(காங்கேசன்துறை)
தினசரி 6-30 இரவு 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி - லக்ஷ்மி
நடித்த
காவல் தெய்வம்

வெஸ்லி சினிமா
(மானிப்பாய்)
தினசரி 6-00, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெய்சங்கர்-வாணிஸ்ரீ
நடித்த
மன சாட்சி

நியூ கலிங்கன்
இனுவில்
4-45 மாத்திரம்
BANCO FOR A GOLD KILLER

தினசரி 6-30, 10-00
தில்லானா
மாகனும்பாள்
21-ம் திகதி முதல்
காவல் தெய்வம்

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜிகணேசன்—ஜெயலலிதா
சுந்தரராஜன்—சந்திரபாபு
மற்றும்பலர் நடித்த
சுஜாதாவின் ராஜா (வர்ணச் சித்திரம்)

ராஜா [யாழ்ப்பாணம்] தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - கே. ஆர். விஜயா
முத்துராமன் - தங்கவேலு
நடித்த
நிலவே நீ சாட்சி

வின்சர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சௌகார் ஜானகி
ஜெயந்தி - நாகேஷ்
நடித்த
இரு கோடுகள்

சாந்தி — சுன்னாகம்
தினசரி 3 காட்சிகள்
V. S. T. பிலிம்ஸ்
குத்து விளக்கு

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30 இரவு 10-00
சனி, ஞாயிறு காலை 10-30
லிடோ [யாழ்ப்பாணம்] தினசரி காலை 10-30
★ சிவாஜி ★ லக்ஷ்மி
★ முத்துராமன் ★ நிர்மலா
நம்பியார் - நாகேஷ் - சச்சு
மற்றும் பலர் நடித்த





தங்கைக்காக
இசை: விஸ்வநாதன் டைரக்ஷன்: யோகானந்த்

லிடோ (யாழ்ப்பாணம்)
தினசரி பி.ப. 2-00, மாலை 6-00 இரவு 9-30
★ எம். ஜி. ஆர். [இருவேடங்களில்]
★ சரோஜாதேவி
★ ரத்னா ★ நம்பியார்
நடித்த
எங்க வீட்டுப் பிள்ளை



## அரி விளம்பரம்

நட்சத்திரம், வயது, பூமின் நேரம். 60க்குள் ஒரு இலக்கம் குறித்து, முத்திரையுடன் கடிதமூலமும் நேரிலும் பதில் பெறலாம். இலவச ஆருடம். டாக்டர் ந சண்முகராஜா ஜே. பி. கொக்குவில். 4175

### விற்பனைக்கு

தமிழ் சித்திரை 1972-1973 வரையுள்ள இராசிப்பலன்கள் ஒவ்வொரு ராசிக்கும் ஒரு புத்தகமாகப் பன்னிரண்டு ராசிக்குமுள்ளன விலை ரூபா 1-50. வே. த. மயில்வாகனம் ஆயர்பாடி சோதிடநிலையம், மாவிட்டபுரம், தெல்லிப்பழை. 4904

பின்வரும் மின்சார உபகரணங்கள் உடனடியாக விற்பனைக்குண்டு. 10 H. P "L D C" மோட்டர் 1440-100 RPM சகல வேலைகளும் செய்யக்கூடிய Home shop மரவேலை யந்திரம் English Electric 7 1/2 H P மோட்டர், "Electrolux" ஸ்பிறே பெயின்ற் யந்திரம், "M E M" 35 amps ஸ்டாட்டர், 15 amps ஸ்டாட்டர். 35 amps மெயின் சுவிச், 15 amps மெயின் சுவிச், 22 வட்டவாள். சைக்கிள். Counter Shafi பெல்ட் புளிகள், பேக்ஸ் மாஸ்டர் 639, பருத்தித்துறை வீதி. முத்திரைச்சந்தி. நல்லூர். 4935

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் பூநாறி மரத்தடி ஒழுங்கையில் பிரசன வீதியிலிருந்து கால் மைல் தூரத்தில் வீட்டுக் காணி நாலு பரப்பு விற்பனைக்குண்டு விபரங்களுக்குத் தொடர்பு கொள்க T. மகாலிங்கம். பயினியர் எலெக்ரோனிக்ஸ், இல. 70, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 4936

7 பரப்புக் காணி கச்சேரி நல்லூர் ரோட்டில் விற்பனைக்குண்டு. விரும்புவோர் வே பொன்னையா, 84, கச்சேரி நல்லூர் ரோட் என்னும் விலாசத்தாருடன் தொடர்புகொள்ளவும். 4934

### தேவை

நல்ல நிலையிலுள்ள அக்கன் ஆல்ஃபா லோக்ஸ்வி தண்ணீர் இறைக்கும் இயந்திரம் அவசரம் தேவை. பம்பின் விபரமும் விலையும் பற்றி பி. ஆசீர்வாதம், ஓமந்தை ஆசிரியருடன் தொடர்புகொள்ளவும். 4930

### கல்வி

Holiday tuitions-Home visited இளைப்பாறிய பட்டதாரி ஆசிரியர்கள் வீடுகள்சென்று ஆங்கிலம், எண்கணிதம், குடியியல், சரித்திரம் புவியியல் ஆகிய பாடங்கள் கற்றுக் கொடுப்பார்கள். விண்ணப்பிக்கவும், விளம்பர இல. 4909. C/o ஈழநாடு. யாழ்ப்பாணம். 4909

பவானி
மூளாய்
தினசரி 6-30 இரவு 9-30
சனி, ஞாயிறு 2-30
சாரதா, ஏ. வி. எம். ராஜன்
நடித்த
துலாபாரம்

MANOHARA
Jaffna
Daily 4-45 7 & 9-45 p m.
Sat Sundays 10-30 a m
William Holden
in
THE WILD BOUNCH

நாகம்ஸ் சினிமா
காரைநகர்
மாலை 4-45 மட்டும்
THE AMPUSHERS
தினசரி 6-30 இரவு 9-45
எம். ஜி. ஆர் - ஜெயலலிதா
தனிப்பிறவி
(புத்தம் புதிய கொப்பி)



சாவகச்சேரி நகரசபை

## கேள்விப்பத்திர விளம்பரம்

சாவகச்சேரிச் சந்தையில் நான்கு அறைகளைக் கொண்ட மலசலகூடம் அமைத்தல்

மேலே சொல்லப்பட்டிருக்கும் வேலையைச் செய்து முடிப்பதற்கு இச்சபையில் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன.

கேள்விப் பத்திரங்கள் 4-5-72 பிற்பகல் 2-00 மணி வரை இந்நகரசபை அலுவலகத்தில் ஆதரவான வைப்புப் பணத்தையும் கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரம் சாதா உறைக்குள் வைக்கப்பட்டு உறையின் மேற்பக்கத்தில் இடதுபுறமாக இவ்வேலைக்குரிய பெயரை எழுதி தலைவர், நகரசபை, சாவகச்சேரி என விலாசமிட்டு உறைக்கு மெழுகுபோட்டு அடையாளம் வைத்து 1972-ம் ஆண்டு வைகாசி மாதம் 5-ம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன் இந்நகரசபை அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டிக்குள் போடவேண்டும். அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

இதைப்பற்றிய விதிகளும் இன்னும் விபரங்களும் அறிய வேண்டின் சபை அலுவலகத்தில் அலுவலகநேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

க. கனகரத்தினம்
தலைவர்
நகரசபை, சாவகச்சேரி.
நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி.
10-4-72 3931

## விளம்பரம்

கச்சாய் கிராமசபை

தெற்கேலி அரசினர் பாடசாலை வீதி வேலைக்கான கேள்விகள், கச்சாய் கிராமசபைத் தலைவரால் 1972-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24-ந் தேதி திங்கட்கிழமை காலை 9-30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள் 1972-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22-ந் தேதி சனிக்கிழமை நண்பகல் 12 மணி வரை ரூபா 50/- வைப்புப் பணமாகவும் ரூபா 10/- பத்திரப்பணமாகவும் இக் காரியாலயத்தில் கட்டிப் பற்றுச் சீட்டுப் பெற்றுக் கொண்டதன் பேரில் விநியோகிக்கப்படும்.

ஏனைய விபரங்கள் கச்சாய் கிராமசபை அலுவலகத்தில் வேலை நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

(ஒப்பம்)
ஆ. த. சிதம்பரப்பிள்ளை,
அக்கிராசனர்
கச்சாய் கிராமசபை,
கொடிகாமம்,
14-4-1972. 3930


கிரிக்கெட்

## யங்லயன்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், செவ். சுண்டிக்குளி 'யங் லயன்ஸ்' விளையாட்டுக் கழகத்துக்கும், நாவற்குளி அண்ணா விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான மென்பந்தாட்டப் போட்டியில் யங்லயன்ஸ் இன்னிங்ஸ் வித்தியாசத்தால் வெற்றி பெற்றது.

யங்லயன்ஸ் முதல் இன்னிங்ஸில் 9 விக்கெட் நஷ்டத்துக்கு 110 ஓட்டங்களைப் பெற்றது அண்ணா விளையாட்டுக் கழகம் முதல் இன்னிங்ஸில் 17 ஓட்டங்களையும், 2-வது இன்னிங்ஸில் 51 ஓட்டங்களையும் பெற்றது.

இப்போட்டி நாவற்குளி வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

(தேநி)

மயிலிட்டியில்

## வள்ளம் திருத்தும் தொழிற்சாலை நிறுவ கோரிக்கை

மாவிட்டபுரம், திங்கள் மயிலிட்டியில் உள்ள மீனவர்களின் வசதியை முன்னிட்டு மயிலிட்டியில் வள்ளம் திருத்தும் தொழிற்சாலை நிறுவவேண்டும் என்று அரசாங்கத்தைக் கோரும் தீர்மானமொன்றை காங்கேசன்துறை அபிவிருத்திச் சபை நிறைவேற்றியுள்ளது.

மேற்படி சபையின் கூட்டம் காங்கேசன்துறைப் பட்டினசபை மண்டபத்தில் பலி வடக்கு காரியாதிகாரி திரு. பி. எஸ். பற்றிக் தலைமையில் நடைபெற்ற சமயம் இப்பகுதி அபிவிருத்திபற்றி ஆராயப்பட்டது.

காங்கேசன்துறைப் பகுதியில் தரிசுக்காணிகளை விவசாயம் செய்விக்கக்கூடியவகையில், கல், கலடுகளை இயந்திரங்கள் மூலம் உடைத்து விவசாய அபிவிருத்திக்கு உதவுதல் உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

## காணி வழங்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ், திருநகர் இரசமலைத்தரிப்புத் திட்டத்தில் குடியேறியுள்ள மக்களுக்கு பயிர்ச் செய்கைக்கு காணி இல்லாத பெருங் குறை நீண்டநாட்களாக இருந்துவருவதால் புதுமுறிப்புப் பகுதியில் ஒவ்வொருவருக்கும் 2 ஏக்கர் வீதம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கிளிநொச்சி பட்டணசபையின் முதலாம் வட்டார மக்கள் குழுத்தலைவர் திரு. த. சற்குணநாதன் கரைச்சி இணைப்புக் குழுவின் செயலாளரும் மாவட்ட காணி அதிபருமான திரு. எம் எம். மக்பூலிடம் கோரியுள்ளார்.

## யாருடைய கூப்பன்?

யாழ்ப்பாணம், செவ் கூப்பன் ஒன்று கண்டெடுக்கப்பட்டு திரு. இராசையா என்பவரால் "ஈழநாடு" காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் பெற்றுக்கொள்ளலாம்.

லாலாசோப்

## மின்னொளி கரபந்தாட்டம்

யாழ்ப்பாணம், செவ். அச்சுவேலி "லாலாசோப்" ஸ்தாபனத்தாரின் 2-வது வருடாந்த 'மின்னொளிக்' கரபந்தாட்டப் போட்டி அடுத்த மாதம் முற்பகுதியில் ஆரம்பமாகவிருக்கிறது.

இம்முறை இப்போட்டியில் "செற்அப்" போட்டியும், "ஓவர் கேம்" மும் நடாத்தப்படவுள்ளது. "ஓவர் கேம்" வட்டமான ரீதியிலும், "செற்அப்" அகில இலங்கை ரீதியிலும் நடாத்தப்படவுள்ளது.

கடந்த வருடத்தைக் காட்டிலும் இம்முறை இப்போட்டி மிகவும் விரிவான முறையில் நடாத்தப்படவிருப்பதாக இப்போட்டி நிர்வாகஸ்தர் திரு. வே. வன்னியசிங்கம் தெரிவித்துள்ளார்.

இந்தப் போட்டிகளில் வெற்றி பெறும் கோஷ்டிகளுக்கு வெற்றிக் கேடயங்களும், வெள்ளிக் கிண்ணங்களும் பரிசளிக்கப்படவுள்ளது. (தேநி)

'பொருளாதார நெருக்கடி தீர

# அரசின் திட்டங்களை மக்கள் ஆதரிக்க வேண்டும்'

மாவிட்டபுரம், திங்கள்

"இன்று நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணப்பட வேண்டுமானால் அரசு அமுல் செய்யும் திட்டங்களைப் பொது மக்கள் ஆதரிக்க வேண்டும். கூட்டுறவுத்துறையில் புகுத்தப்பட்ட திட்டங்கள் வெற்றியடைய மக்கள் ஆதரவு நிச்சயம் தேவையானது".

இவ்வாறு அளவெட்டி ஊரெழுப்பிட்டி கூட்டுறவு சங்க கிளையைத் திறந்து வைத்துப் பேசுகையில் யாழ் மேலதிக அரசாங்க அதிபர் திரு ஏ ஏ ஜோசெப் கூறினார்.

அளவெட்டி-மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 2வது கிளையாகத் திறக்கப்பட்ட இந்நிலையத்துக்கான திறப்புவிழா திரு. வி பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்றது. மேலதிக அரசாங்க அதிபர் குத்துவிளக்கேற்றிவைத்துப் பேசுகையில் மேலும் கூறியதாவது.

"இக்கிளை திறக்கப்பட்டமை இப்பகுதி மக்களுக்குப் பேருதவியாக அமைந்துள்ளது. இப் பகுதி மக்கள் இதுகாலம்வரை அனுபவித்த கஷ்டங்கள் நீங்கும் வகையில் இக்கிளை திறக்கப்பட்டுள்ளது. இக்கிளையின் வளர்ச்சி இப்பகுதி மக்கள் கையில்தான் உள்ளது.

இன்று நாட்டில் அமுல் செய்யப்பட்டுள்ள கூட்டுறவுப் புனரமைப்புத் திட்டம் கூட்டுறவுத்துறையில் புத்துணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பாவனைப் பொருட்களை விற்பதில் மட்டும் ஈடுபட்டிருந்த கூட்டுறவுச் சங்கங்கள் இன்று அபிவிருத்தி வேலைகளிலும் ஈடுபட்டுள்ளன. கிராமங்கள் தோறும் பல்வகையான அபிவிருத்தித் திட்டங்களை இந்தச் சங்கங்கள் ஏற்படுத்தி கிராம, சமூக வளர்ச்சிக்கு உதவவேண்டும் என்றார்.

அளவெட்டி-மல்லாகம் ப நோ கூ சங்கத் தலைவர் திரு வ பொன்னம்பலம் பேசுகையில் பொது மக்களின் நன்மை கருதியும், பொருளாதாரத்துறையில் அபிவிருத்தி செய்வதை கருதியே இக்கிளை திறக்கப்பட்டுள்ளது" என்றார்.

வலி-வடக்கு காரியாதிகாரி திரு பி எஸ் பத்திரஸ், வலி-வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகஸ்தர் திரு க சுந்தரசாமி உட்படப் பலர் உரையாற்றினர்கள்.

# 'நாடகங்கள் இல்லாத சமூகம் காட்டுமிராண்டித்தனமானது'

கொழும்பு திங்கள்

'மனிதன் எத்தனையோ விதமான போராட்டங்களுக்கு இடையில் வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கின்றான். நாடகக்கலையின்மூலம் அந்த மனிதனைச் சிறிது நேரமாவது சாந்திப்படுத்த முடிகின்றது. எந்த ஒரு சமூகத்திலும் நடிகர்கள் இருக்கவேண்டும். நாடகங்கள் இல்லாத சமூகம் காட்டுமிராண்டித்தனமானது.'

'லிட்டில் ஸ்ரேஜ்'ஜின் ஆதரவில் ஞாயிற்றுக்கிழமை மாலை ஒட்டல் தப்ரேனில் நடைபெற்ற மஞ்சள் குங்குமம் கதாநாயகன் ஸ்ரீசங்கர் எழுதிய 'நானும் நடிகர் திலகமும்' என்ற நூல் வெளியீட்டு விழாவின்போது குத்துவிளக்கேற்றி வைத்துப் பேசிய வித்தியாரத்தினம் நவாலியூர் சோ நடராஜன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கொழும்பு கலைச்சங்கச் செயலாளர் திரு கே பாலச்சந்திரன் தலைமையில் விழா ஆரம்பமாகியது. 'லிட்டில் ஸ்ரேஜ்' தலைவர் திரு கே ஜெயராம் வைபவத்தில் கலந்து சிறப்பிக்க வந்திருந்தவர்களை வரவேற்றுப் பேசினார். திரு ரா மு நாகலிங்கம் நூலின் முதற்பிரதியை வாங்கினார்.

ஸ்ரீசங்கர் சமீபத்தில் தமிழகம் சென்று சிவாஜியுடன் கலந்து பழகிய தனது இனிய நினைவுகளை நூலாக வெளியிட்டுள்ளார். சிவாஜியுடன் சேர்ந்து திரைப்படத்தில் நடிக்கப்போகும் ஸ்ரீசங்கர் எதிர்காலத்தில் 'நானும் ஸ்ரீசங்கரும்' என்ற தலைப்பில் சிவாஜிகணேசனே எழுதும்படியான முறையில் நடந்துகொள்ளவேண்டும் என்றார். "சமுதாயம்" திரைப்படக் கதாநாயகன் திரு தவரத்தினம் சிவாஜி எம் ஜி ஆர் என்ற பேதமோ, இனமத வேறுபாடோ லிட்டில் ஸ்ரேஜ்ஜுக்கு கிடையாதெனக் கூறினார். துணைத் தலைவர் திரு ஆர் இராமச்சந்திரன் பேசுகையில் வாழும் பொழுதே கலைஞர்களை வாழ்த்திக் கௌரவிக்கவேண்டும் என்ற நோக்கோடுதான் கலைஞர் ஒருவர் இன்னொரு கலைஞரைப்பற்றி எழுதிய இந்நூல் வெளியீட்டுவிழாவை நடத்துகின்றோம் எனக் குறிப்பிட்டதுடன் லிட்டில் ஸ்ரேஜ் எல்லோருக்கும் பொதுவான ஓர் அமைப்பு என்பதைத் திட்டவட்டமாக வலியுறுத்திக் கூறினார். இவரைத் தொடர்ந்து நாடக இயக்குனர் ஜனாப் சுஹேர் ஹமீட், திருவாளர்கள் மாணிக்கவாசகர், ஏ எஸ் ராஜா, இளஞ்செழியன் ஆகியோரும் பேசினர். திரு கே கே மதிவதனன் வாழ்த்துப்பா பாடினார்.

அகில இலங்கை சிவாஜி கணேசன் ரசிகர் மன்றத்தின் சார்பாக திரு இக்னேஷியஸ் மொராயஸ் நடிகர் ஸ்ரீசங்கருக்கு மலர்மாலை அணிவித்துக் கௌரவித்தார். திரு ஸ்ரீசங்கர் நன்றி கூறினார்.

## புதிய ஜே. பி. க்கு வரவேற்பு

பருத்தித்துறை, திங்.

நெல்லியடிப் பட்டினசபை உறுப்பினர் திரு. த. பாஸ்கரன் சமாதான நீதிபதியாக பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு. சி. ஜே. இராசரத்தினம் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டதைத் தொடர்ந்து அவருக்கு நெல்லியடியில் ஒரு பொதுவரவேற்பளிக்கப்பட்டது. கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## மணி ஸ்தாபிதம்

மாவிட்டபுரம், திங்கள்

மாவிட்டபுரம் கடலை வைரவர் ஆலயத்தில் புதிய மணி ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. அண்மையில்தான் இவ்வாலயத் திருப்பணி வேலைகள் முடிவுற்றன. புதிய மணி ஸ்தாபிக்கப்பட்ட அன்று விசேஷ அபிஷேகங்களும் பண்ணிசைப் புலவர் பி. ஏ. எஸ். இராசசேகரனின் கச்சேரியும் மற்றும் இசை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

சினிமா விமர்சனம்

# ராஜா

"காதல் கதைகள் சொல்லுராஜா!' ஜெயலலிதாவின் இந்தக் கேள்விக்கு சிவாஜி என்ன பதில் சொல்லுகிறார் என்று கேளாதீர்கள்! 'ராணி'யிடம் போய்க் கேளுங்கள்.

இன்ப சுகத்துடன் "இரகசிய போலீஸ் இன்ஸ்பெக்டர்" வேலையையும் எவ்வளவு சாமர்த்தியமாக செய்து சக்கைபோடு போடுகிறார் என்பதை எல்லாம் சொல்ல முடியாது.

யாழ்ப்பாணம் ராணித் தியேட்டர் "ராஜா" வின் காதல் 'விளையாட்டு'க் கலையும் துப்பறியும் சாமர்த்தியத்தையும் அழகழகாகச் சொல்லும்!

கள்ளக்கடத்தல் கோஷ்டியுடன் சேர்ந்த "கடத்தல் மன்னன்" ஆகிறார் சிவாஜி. அவர்தான் ராஜா! ராஜாவுக்கு ஏற்ற ராணியாக வந்து ஈடு கொடுத்து நடிக்கிறார் ஜெயலலிதா. கடத்தலா? காதலா? ஜெயலலிதாவிடம் கற்றுக்கொள்ளவேண்டும்!.

அந்தக் கட்டம் அழைத்து விடுகிறது. தாயின் தலையை தனது தனது கோரப்பிடியில் இழுக்கும். அடித்தும் சித்திரவதை செய்யும்போது, அவனது மகன் தான்தான் என்பதை காட்டிக்கொள்ள முடியாத நிலையில் ஆத்திரத்தையும் வேதனையையும் அடக்கிக்கொண்டு அப்படியே சிரித்து சிரித்து உள்ளுக்குள்ளேயே அழுகிறாரே சிவாஜி, அது அவருக்குத்தான் வரும்! நடிப்பு மன்னா, உன்னை அப்படியே அணைத்துக்கொள்கிறோம்!

சிவாஜியின் அண்ணனாக வரும் பாலாஜி, பொலிஸ் கமிஷனர் மேஜர் சுந்தரராஜன், ரங்காராவ், மனோகர், சந்திரபாபு இவர்களெல்லாம் ராஜாவில் நடிக்கிறார்கள்.

"குளுகுளு"க்களுக்கேற்ற காட்சிகள் மனதைக் கொள்ளை கொள்ளுகின்றன. பாட்டுகள் இனிக்கின்றன. 'ராஜா'வை இன்னும் நீங்கள் பார்க்கவில்லையா? பிறகு கவலைப் படுவீர்கள்! சந்தர்ப்பத்தை விட்டுவிடாதீர்கள்.

—ராஜன்

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

(செய்திகள், காலை 6-30 பகல்12-45, மாலை 6,00 இரவு 9-00)

காலை 6-15 நாதாஞ்சலி, 6-20 சைவநற்சிந்தனை சிந்தனையை, 6-25 இஸ்லாமியநற்சிந்தனை, 6-40 அறிவிப்புகள் 6-50 பக்திப்பாடல்கள் 7-15 கானமஞ்சரி, மாகாணச் செய்திகள் 7-35 குரல்வளம், 8-00 இசைவேளை எஸ். சண்முகராசவேல், என் திலகநாயகம்போல், எஸ். பாலசிங்கம், 8-15 இஸ்லாமிய கீதம்,

6-10 அறிவிப்புகள், 6-15 அகல்விளக்கு — அறிவியல் அரங்கம்-தொழில் துறையில் மூலங்கள். வாழ்க்கையில் விஞ்ஞானம் - எரிபொருள் நடத்துபவர்; சர்மா அண்ணா. 6-30 வயலின்-நிர்மலா இராஜேந்திரன், 7-00 தமிழ்மூலம் சிங்களம், 7-15 கதமும் புலமும்- கைத்தொழிற்றிணைக்களத் தகவற்பிரிவினர் அளிக்கும் நிகழ்ச்சி. 7-30 உலகச்செய்திகள், 7-35 சாத்திரியகோஷ்டி 7-45 பேச்சு "ஈழத்தின் தனிப்பாடல்கள்—2 கனக செந்திநாதன், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி. 9-10 அறிவிப்புகள். 9 30 கலைக்கோலம்— நடத்துபவர்; கு. குருசாமி 10-00 நேயர் விருப்பம்.

# 'சிரமதானமூலம் பின்தங்கிய பகுதிகளை முன்னேற்றவேண்டும்'

மாவிட்டபுரம், திங்.

"இந்த நாடுள்ள நிலையில் அரசு சகல பகுதிகளுக்கும் பணம் வழங்கமுடியாதுள்ளது. பொதுமக்கள் அரச உதவிகளை எதிர்பார்க்காது சிரமதானமூலம் பின்தங்கிய பகுதிகளை முன்னேற்றவேண்டும்".

இவ்வாறு காங்கேசன்துறைப் பட்டினசபையின் 3-ம் வட்டாரத்தில் சிரமதானமூலம் அமைக்கப்பட்ட வாசிகசாலையையும் வீதியையும் திறந்துவைத்து விழாவில் பேசுகையில் காங்கேசன்துறைப் பட்டினசபையின் தலைவரான திரு க. ஜெயபாலசிங்கம் கூறினார்.

வீமன்காமம் வடக்கு வாலிபர் முன்னேற்றக் கழகத்தின் ஆதரவில் நடைபெற்ற இச் சிரமதான வேலைகளைப் பூர்த்திசெய்தமைக்காக மேற்படி கழக இளைஞர்களைப் பாராட்டிய தலைவர் க. ஜெயபாலசிங்கம் மேலும் பேசுகையில் "இப்பகுதி ஒரு பின்தங்கிய பகுதியாக விளங்கியபோதும் பொருளாதாரத்துறையில் நாட்டை முன்னேற்ற இப்பகுதி மக்கள் ஆற்றும் சேவை மேலும் தொடரவேண்டும். நாட்டுக்காக எல்லையற்ற தியாகம் செய்து நாட்டைப் பொருளாதாரத் துறையில் முன்னேற்றவேண்டியது ஒவ்வொரு மக்களினதும் கடமையாகும்" என்றார்.

திரு. நா. இராமலிங்கம் தலைமையில் நடந்த இவ் வைபவத்தில் பட்டினசபை 3-ம் வட்டார உறுப்பினர் திரு. இ. குருசாமி, எஸ். கனகரத்தினம் ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றினர்கள்.

மேற்படி கழகத்தினர் தமது கிராமப் பிரச்சினைகள் சம்பந்தமாக நீண்ட மகஜரொன்றை பட்டினசபைத் தலைவரிடம் ஒப்படைத்தனர்.

## உங்கள் பலன்

சித்திரை மாதம் 6-ந்திகதி (18 4-1972)

மேஷம்-சகோதரவழியால் சஞ்சலத்திற்கு இடமுண்டு, உடல்நலம் சிறிது பாதிக்கப்படலாம்.

ரிஷபம்- வழக்கு விவகாரங்களிலும் மாட்டிக்கொள்ளலாம், சிலரின் குறுக்குவழித் தலையீடு உங்கள் கோபத்தைக் கிளறிவிடும்.

மிதுனம்-பொருள் வரவுக்கும் இடமுண்டு, இல்லத்தில் திருப்திகரமான நிலை தென்படும். அந்தஸ்திலும் முன்னேற்றம் உண்டு'

கடகம்-எதிரிகளின் சூழ்ச்சிகள் மனநிம்மதியைக் குறைக்கும். தொழிலிலும் தடைகள் உண்டு.

சிம்மம்- நீர்ப்பாசனப்பகுதியில் கடமையாற்றுபவர்களுக்கு சிறப்பான தினம், கல்வியிலும் ஆர்வம் பிறக்கும்.

கன்னி- சமயோசித நடவடிக்கையின்மூலம் எதையும் வெற்றிகாண முடியும், குடும்பத்திலும் பிணைப்புகள் இறுகும்.

துலாம்- எதிலும் ஏமாற்றம் தென்படும், அரசபகுதியிற்கு இடமுண்டு எதிலும் அடக்கத்துடனும் நிதானத்துடனும் இருக்கவும்.

விருச்சிகம்- கற்றலிலும் வேண்டியதைச் சாதிக்கக் கூடிய செல்வாக்குப் பெருகும், இன்று பொன்னாள்.

தனுசு- பல வழிகளிலும் பணம் செலவாகும். சிலர் கடன்படவும் நேரிடலாம் எதிரிகளின் அட்டகாசம் அதிகரிக்கும்.

மகரம்- புண்ணிய வழிகளில் பொருட் செலவும் ஏற்படும் கண்ணியமான உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடப்படலாம்

கும்பம்- கற்றவர்கள் ஆதரவு தப்பாமல் கிடைக்கும் இடமாற்றத்துக்கான வழிவகைகள் மேற்கொள்ளப்படலாம்.

மீனம்- பெரிய இடத்துத் தொடர்புகள் ஏற்படுவதற்கும் இடமுண்டு சிலர் சொந்த விவகாரங்களில் ஈடுபடுவார்கள் கண்ணியமான தினம்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

யாழ்.மாநகரசபை

## ஆயுள்வேத வைத்தியசாலை

கொழும்பு, செவ்.

யாழ்ப்பாணம் மாநகரசபையின் இலவச ஆயுள்வேத வைத்தியசாலையில் வைத்திய கலாநிதி ஏ. ஏ. கந்தையா பிரதம வைத்தியராகப் பதவியேற்றுள்ளார். இவர் வாதம், பாரிசரோகம், குஷ்டம், சர்ப்பரோகம், மேகநோய், மூலம் ஆகிய வியாதிகளுக்குச் சிறந்தமுறையில் சிகிச்சையளிப்பவருமாகவும் இவரது நியமனத்தின் பின் இவ் வைத்தியசாலையில் நோயாளர் தொகை அதிகரித்துவருவதாகவும் தெரிகிறது'

## சீட்டிழுப்பு

யாழ்ப்பாணம், செவ்.

தேசிய லொத்தர் சபையின் 391-ம் இலக்க 50 சத டிக்கட்டுகளுக்கான சீட்டிழுப்பு இன்றுமாலை வட்டுக்கோட்டை நகரசபை மண்டப வெளியில் இடம்பெறும். பரிசுபெற்ற டிக்கட்டுகள் [illegible] இம்மாதம் 19-ம் திகதி முதல் மேலும் ஆறு மாதங்கள் வரை கொழும்பு சாலிவீதியிலுள்ள தேசிய லொத்தர் சபை அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.

உங்கள் ஆறுதல் பரிசுகளை
உங்கள் மக்கள் வங்கியிலேயே பெறுங்கள்!

★ 'தேசிய லொத்தர்'
★ 'மகாஜன சம்பத'
★ 'தினசரி அதிர்ஷ்டம்'

ஆகிய சீட்டிழுப்புகளின் ஆறுதல் பரிசுபெறும் டிக்கெட்டுக்கு உரிமையாளர்கள், குறிப்பிடப்பட்டதும், தங்கள் பரிசுகளை மக்கள் வங்கியின் எல்லாக் கிளை அலுவலகங்களிலும் பெற்றுக்கொள்ள மக்கள் வங்கியின் சம்மதத்துடன் தேசிய லொத்தர் சபை ஒழுங்கு செய்துள்ளது.

இப்புதிய ஒழுங்கு சிறுதொகைப் பரிசைப் பெறுபவர்களுக்கு தேசிய லொத்தர்சபையின் கொழும்புத் தலைமைக்காரியாலயத்திற்கு வருவதற்காக ஏற்படும் வீண் செலவில் இருந்துவிடுபட உதவும்.

தேசிய லொத்தர் சபை

# தகைமைப் பத்திரமற்ற ஆசிரியர்கள் பற்றி கேள்வி

கொழும்பு, திங்கள் "நாட்டிலுள்ள எல்லாத் தொகுதிகளிலிருந்தும் தகைமைப்பத்திரம் பெறாத ஆசிரியர் பதவிகளுக்கு, கல்வி அமைச்சுக்குக் கிடைத்த விண்ணப்பங்களின் மொத்தத்தொகை என்ன? இவற்றுள் எத்தனை சிங்கள, தமிழ், முஸ்லீம் விண்ணப்பதாரர்களிடமிருந்து கிடைத்தன; 15-9-71 வரையில் அமைச்சினால் தெரிவு செய்யப்பட்டு பல்வேறு பிராந்திய மாவட்டக் காரியாலயங்களுக்கு நேர்முகப்பரீட்சைக்கும் நியமனத்திற்குமென அனுப்பப்பட்ட விண்ணப்பதாரிகளின் மொத்தத்தொகை என்ன? இவர்களுள் எத்தனைபேர் சிங்கள, தமிழ் முஸ்லீம்கள்?

மேற்கண்ட கேள்விகளை சாவகச்சேரி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வ. நவரத்தினம் இம்மாதம் 20-ந் திகதி கூடவிருக்கும் ஆட்சி மன்றக்கூட்டத்தில், கல்வி அமைச்சர் ஜனாப் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மத்திடம் கேட்கவிருக்கிறார். (ச)

# "சிறுவயது முதல் ஈடுபட வேண்டும்"

காவிட்டபுரம் திங்கள் சனசமூகசேவா உணர்ச்சி கொண்டு மனப்பான்மை என்பன சிறுவயது முதலாக வளர்த்தெடுக்கப்பட வேண்டும். அவ்விதமனப்பான்மை முன்னெடுக்க வாசிகசாலைகள், சனசமூகநிலையங்கள், சிறந்த விளைநிலமாக இருக்கின்றன. வாசிகசாலைகள் அறிவை வளர்க்கின்றன, அறிவு வளராதபோது அங்கு அச்சமே குடிகொள்கிறது. மடமை இருளில் ஒளிவிளக்காக வழிகாட்டி நமக்குப் பார்வை அளித்து நிற்பதே அறிவு

இவ்வாறு அளவெட்டி வடக்கு சனசமூக நிலைய 24-வது ஆண்டுவிழாவில் கலந்து கொண்டு சமூக சேவையில் இளைஞர் பங்கு என்ற தலைப்பில் உரையாற்றிய நல்லூர் கம் கிராமசபைத் தலைவரும் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகருமான திரு வி. பொன்னம்பலம் கூறினார். நிலைய முன்றலில் நிலையத்தலைவர் திரு நா. பாலசிங்கம் தலைமையில் நடந்த இவ்விழாவில் கலாச்சார அமைச்சரால் கௌரவிக்கப்பட்ட எழுத்தாளர் திரு அ. செ. முருகானந்தனுக்கும் நாதஸ்வரவித்துவான் என். கே. பத்மநாதனுக்கும் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது. திரு வ. பொன்னம்பலம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது!

உழவனுக்கு நிலம் சொந்தமாகவேண்டும். அந்த அறிவு அவ்வித உரிமை புணர்ச்சி அவனுக்கு ஏற்படவேண்டும். உரிமையுள்ள சொந்த நிலத்தில் அவன் சிந்தும் வியர்வை அவமே போகாது. நாட்டின் எல்லாத்துன்பங்களையும் பிற போக்குத்தனங்களையும் துயரையும், இதுபோன்ற அறிவு வளர்ச்சி அதன் பேறான விழிப்புணர்ச்சி, உரிமை எழுச்சியினாலேயே அகற்றமுடியும்."

முன்னாள் வட்டுக்கோட்டை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கம் "பாரதியும் தமிழும்" என்னும் தலைப்பில் உரையாற்றுகையில் கூறியதாவது!-

"ஒரு நெடும்கவியின் மதியில் அகில உலகத்தமிழரும் வாழ்ந்து கொண்டிருக்கிறோமென்றால் அந்தக் கவிபாரதிதான் அகில உலக தமிழருக்காகவே 60 ஆண்டுகளுக்குமுன் பாரத் தமிழ்ச்சங்கம் முழங்கேன்" ஒரே தமிழ், ஒரே தமிழுலகம் ஆகியவற்றை உருவாகக் கனவு கண்டார் பாரதி.

பேராதனைப் பல்கலைக்கழகப் பொருளியல்துறை விரிவுரையாளர் திரு. என். சிவபாலகணேசன் 'எமது நாட்டின் பொருளாதாரம்' என்னும் தலைப்பில் பேசுகையில் கூறியதாவது!

கமார் அறுபது சதவீதமான விவசாயிகள் வாழும் நாடான இலங்கையின் வெளிநாட்டு ஏற்றுமதி வர்த்தக வருமானத்தில் தேயிலை, றப்பர், தென்னை மூன்றுமே ஜீவநாடியாக அமைந்துள்ளன. அத்தியாவசிய உணவுப் பொருள் உற்பத்தியை உள்நாட்டில் அமோகமாகப் பெருக்குவதும், இன்றைய வெளிநாட்டு இறக்குமதியில் கொஞ்சமையான கட்டுப்பாடும், பங்கீடும், சிக்கனமுமே சுதந்திர இலங்கைக்கு விமோசனம் தரும் மார்க்கமாக இருக்கும்.

நிலைய வளர்ச்சிக்காக உழைத்த காலஞ்சென்ற உருத்திரமூர்த்தி, த. நடராசா, அ. வேல்சாமி ஆகியோரின் உருவப்படங்களை தமிழசுத் தலைவரும் காங்கேசன்துறை ஆட்சிமன்ற உறுப்பினருமான எஸ் ஜே. வி. செல்வநாயகம் திறந்துவைத்தார். நிலையச் செயலாளர் நா. அருளானந்தம் நன்றி கூறினார். கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

# 'யதார்த்தமாக சிந்திப்பதே உண்மையான நாடகங்கள்'

நெல்லியடி, திங்கள் "நாடகங்களில் காதலைச் சித்தரித்து ரசிகர்களை மகிழவைப்பது நாடகத்தின் உண்மையான பணியல்ல. உழைக்கும் வர்க்கத்தை யதார்த்தமாகச் சித்தரிப்பதே உண்மையான நாடகங்களாகும். ரோமியோ ஷேக்ஸ்பியர் காலத்தின் பின்னரே நாடகக்கலை முன்னேற்றமடைந்தது. ரஷ்யாவில் செக்கோவின் காலத்தின் பின்னரும், ஈழத்தில் மஹாகவி காலத்தின் பின்னருமே நாடகக்கலை போதியளவு சிறப்படைந்தது".

இவ்வாறு திரு மெய்யரசன் வதிரிஸ்ரீ முத்துக்குமாரசுவாமி ஆலயத்தில் நடைபெற்ற உடுப்பிட்டி தமிழ் இளைஞர் முன்னேற்றக் கழக நாடக விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார். நெல்லை க. பேரன் பேசுகையில் தற்போது நம் நாட்டில் அரங்கேற்றப்படும் நாடகங்கள் அனைத்தும் தென்னிந்தியப் பிரதிபலிப்பே ஆகும். ஈழத்துக் கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் நாடகங்கள் ஆங்காங்கே ஒரு சில நடைபெற்று வருவது மகிழ்ச்சிக்குரியது என்றார்.

உடுவை தில்லை நடராசா, ப. நித்தியானந்தம், த. சிதம்பரப்பிள்ளை ஆகியோரும் பேசினர். இந் நாடக விழாவில் அன்புப் பரிசு, மாசறியம், இயாகச்சுடர், சங்கடத்தாரின் சங்கடம் ஆகிய நாடகங்கள் இடம் பெற்றன.

## இலவச படக்காட்சி

யாழ்ப்பாணம், செவ் நச்சமோட்டை சனசமூக நிலையத்தின் ஆதரவில் அரசாங்கத் தகவல்பகுதி பிரிவினரால் இன்று மாலை 6 மணியளவில் நச்சமோட்டை சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் ஓர் இலவசப் படக்காட்சி காண்பிக்கப்படும். யாழ். நகர மேயர் திரு. அல்பிரட் துரையப்பா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

## உற்சவம்

வல்வெட்டித்துறை, திங்கள் வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன்கோவில் கொடியேற்றம் இம்மாதம் 14ம் திகதி ஆரம்பமாகியுள்ளது. 15 நாட்களுக்கு உற்சவம் நடைபெறும்.

இம்மாதம் 24 ந் திகதி வசந்தோற்சவமும் 27, 28 ந் திகதிகளில் ரதோற்சவமும் தீர்த்தோற்சவமும் நடைபெறும். 0 0 0

வல்வெட்டித்துறை, திங் வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் கோவில் வருடாந்த உற்சவம் இம்மாதம் 14-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

24-ம் திகதி வஸந்தோற்சவமும், 27-ம் திகதி ரதோற்சவமும் நடைபெறும்.

28 ம் திகதி தீர்த்தோற்சவத்தின்று இரவு அம்மாள் தெடியவாடு பிள்ளையார் கோவிலிலிருந்து ஊர்வலம் வரும்.

## ஐடிபந்தண அபிஷேகம்

யாழ்ப்பாணம், செவ். காரைநகர் சிவன்கோவில் வடக்கு வீதிக்கருகாமையிலுள்ள ஸ்ரீசிவாச்சிரமத்தில் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீசிவகாமி அம்பாள் சமேத நடராஜப் பெருமானுக்கு ஐடிபந்தண அபிஷேகம் நாளை மறுதினம் வியாழக்கிழமை நடைபெறவிருக்கிறது. இதனை ஸ்ரீசிவானந்த முனீஸ்வரர் நடாத்திவைப்பார்.

## கைப்பற்றிய...

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் சந்தேகநபர்கள் பற்றிய விபரங்களை அறியக்கூடியதாக இருந்ததாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

எந்தக் கதவுகளையும் திறக்கக்கூடிய திறப்பொன்றையும் எந்த வீட்டு யன்னல்களையும் உடைக்கக்கூடிய இரும்பிலான கருவியொன்றையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர். வீட்டின் உள்பக்கத்தில் பூட்டப்பட்டிருந்தாலும் இந்தத் திறப்பினால் அதனைத் திறக்கமுடியுமென்றும் பொலிசார் தெரிவித்தனர்.

வடமாகாணத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த கொள்ளைச்சாமான்கள் எல்லாம் பொலிசாரால் கைப்பற்றப்பட்டுவிட்டதென்றும் வடமாகாணத்திற்கு வெளியிலும் சிலசாமான்கள் சென்றிருப்பதாக பொலிசார் கருதுவதாகவும் வடபகுதிப் பொலிஸ் அதிபர் தெரிவித்தார்.

## ஒத்துழைப்பு

தப்பைத் தலைக்குவதற்கு வடபகுதி நகைக்கடை முதலாளிகள், பொலிசாருக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கியுள்ளனரென்றும் வடபகுதி பொலிஸ் அதிபர் மேலும் தெரிவித்தார்.

மன்னார் தலைமைக் காரியாலய பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு நவரத்தினராசா நேற்று கொழும்பு சென்றுள்ளார். கொழும்பில் சிலபகுதிகளில் கொள்ளையடிக்கப்பட்ட நகைகள் இருப்பதாக பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

தலைமறைவாக விருக்கும் மற்றும் 4 சந்தேக நபர்களைப்பற்றிய விபரங்களும் பொலிஸாருக்கு நன்கு தெரியுமென்றும், பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

# "தனிப்பட்ட கோபதாபங்களை சாதிக்கக் கூடாது"

சுன்னாகம், திங்கள் "மக்கள்குழு உறுப்பினர்கள் தனிப்பட்ட கோபதாபங்களையோ, அரசியல் கட்சிபேதங்களையோ சாதித்துக் கடுமையாற்றக்கூடாது. அவர்கள் பொறுமையோடும் நேர்மையோடும் நடந்து மக்களுக்குத் தொண்டாற்றவேண்டும்".

இவ்வாறு உடுவில் தொகுதியில் சுன்னாகம் பட்டினசபை எட்டாம்வட்டார மக்கள் குழுவின் முதலாவது கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் உடுவில் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் கூறினார்.

மக்கள்குழுத்தலைவர் திரு: ம. ஜீவரத்தினம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு தர்மலிங்கம் மேலும் தனது உரையில் மக்கள் குழுக்கள் இயங்கவேண்டிய முறை பற்றியும் லஞ்சஊழல் முதலியவற்றை ஒழிப்பதுபற்றியும் கூறினார்.

இக்கூட்டத்தில் சுன்னாகம் பட்டினசபையில் எட்டாம் வட்டார உறுப்பினர் திரு. இ இராசதுரை செயலாளராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

# எம். ஜி. ஆர்.—கருணாநிதி கருத்து மோதல் இல்லை

சென்னை ஏப். 17 முதலமைச்சர் திரு. மு. கருணாநிதிக்கும் தமக்கும் இடையில் கருத்து மோதல்கள் ஏற்பட்டிருப்பதாகவும் இதனால் திராவிட முன்னேற்றக் கழகம் பிளவுபட்டுவிடுமென்றும் வெளிவந்துள்ள செய்திகளை தி. மு. க. வின் பொருளாளரும் முக்கிய உறுப்பினருமான திரு. எம். ஜி ராமச்சந்திரன் மறுத்துள்ளார்.

சேலத்தில் நடைபெற்ற தி மு க. மகாநாட்டில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையிலேயே எம். ஜி ஆர். இந்த மறுப்பை வெளியிட்டார்.

மாநில சுயாட்சிக்காகப் போராட்டம் எதுவும் தேவையில்லை என்று எம். ஜி. ஆர். கூறினார்.

தமிழ்நாடு மக்கள் அனைவரும் இக்கோரிக்கையை ஆதரித்தால் பிரதமந்திரி திருமதி இந்திரா காந்தி நியாயமான கோரிக்கையை ஏற்றுக்கொள்வார் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

வடபகுதி தவறணைகளுக்கு

# 70 லட்சரூபா கடன் மக்கள்வங்கி வழங்கும்

குருநகர், திங்கள் வடபகுதியில் நிறுவப்பட்டுள்ள 30கள் உற்பத்தி விற்பனவுச்சங்கங்களுக்கும் மொத்தம் 70 லட்சம் ரூபாவை கடனாகக் கொடுக்க மக்கள் வங்கி சம்மதம் தெரிவித்துள்ளது.

இத்தொகையில் முதல் ஆரம்பக் கடனாக ஒவ்வொரு சங்கங்களுக்கும் 15 ஆயிரம் ரூபா வீதம் வங்கி இம்மாதம் கொடுக்கின்றது. இப்பணம் தவறணைகள் அமைப்பதற்கும் தளபாடங்கள் வாங்குவதற்கும் பயன்படுத்தப்படும்.

மொத்தம் 210 தவறணைகள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. நிறுவப்பட்டுள்ள 30 சங்கங்களும் இம்மாதம் 27-ம் திகதி முதல் இயங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேற்படி சங்கங்களின் ஆரம்பப்பிரச்சனைகளைக் கவனிப்பதற்கு அவ்வப்பகுதி காரியாதிகாரி மதுவரிபாலன உத்தியோகத்தர், கூட்டுறவு உத்தியோகத்தர் ஆகியோரைக் கொண்ட குழுஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

## மீண்டும் ஆரம்பிக்க வேண்டும்

பாரிஸ், ஏப்: 17 வியட்னாம் போரை இருபகுதியினரும் உடனடியாக நிறுத்திவிட்டு பாரிஸ் சமாதானப் பேச்சுவார்த்தைகளை இம்மாதம் 27-ம்திகதி மீண்டும் ஆரம்பிக்கவேண்டுமென வியட்னாம் ஜனநாயகக்குடியரசு கேட்டுக்கொண்டுள்ளது.

## குண்டுவீச்சை உடன் நிறுத்த வேண்டும்

புதுடில்லி, ஏப் 17 வியட்னாமில் குண்டுவீசுவதை உடனடியாக நிறுத்துமாறு இந்தியா அமெரிக்காவைக் கேட்டுக்கொண்டுள்ளது. இதேவேளையில் வியட்னாமில் அமெரிக்க பி 52 ரக குண்டுவீச்சுவிமானங்கள் தாக்குதல் நடத்துவதை இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. சுவரண்சிங் கடுமையாகக் கண்டித்துள்ளார். இதுபற்றி அவர் லோகசபையில் மிகவும் வருத்தத்துக்குரியதென்றும் மனிதத்தன்மைக்கு மாறானதென்றும் இவ்வளவு தூரம் அச்சமாக மதிப்பது வேதனைக்குரியதென்றும் வர்ணித்த அவர் வியட்னாமில் கண்காணிப்புக் குழுவின் தலைமைப்பொறுப்பில் இருக்கும் இந்தியா இதுபற்றி பாராமுகமாக இருக்க முடியாதென்றும் கூறினார்.

## அபராதம்

வல்வெட்டித்துறை, திங்கள் பாதையை தடைசெய்யும் வகையில் லொறியில் வைக்கோல் ஏற்றிச்சென்றதாகவும் 1972-ம் ஆண்டுக்குரிய லைசென்ஸ் கட்டணம் செலுத்தவில்லை என்ற இரு குற்றங்களுக்காகவும் வேலுப்பிள்ளை சின்னத்தம்பி என்பவர் மீது தொடரப்பட்ட வழக்கில் பருத்தித்துறை நீதிபதி திரு. ஜே. ஜீ. ஆசீர்வாதம் 30 ரூபா அபராதம்விதித்தார்.

## மரண அறிவித்தல்

### திரு. மு. செல்லையா

ஏ. பி. த. க. பாடசாலையின் இளைப்பாறிய தலைமையாசிரியரும், அருளம்மாவின் அன்புக் கணவரும், அற்புதமலர், செல்வமலர், தேவசாந்தி என்பவர்களின் அருமைத் தந்தையும், யூனியன் கல்லூரி ஆசிரியர் திரு. க குணசிங்கத்தின் அன்பு மாமனுமாகிய திரு. மு. செல்லையா 17-4-72ல் காலமானார். அடக்க ஆராதனை ஏழாலை வடக்கிலுள்ள அவரது இல்லத்தில் 18-4-72 நாலு மணிக்கு நடைபெறும்.

4937

